**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**CRLMP.No. 41/2023 P.W. 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | திரு. செந்தில் வேல் குமார் காவல் ஆய்வாளர் | **Caste** | **:** | |
| **Father's Name** | **:** | க/பெ. | **Calling** | **:** | |
| **Village** | **:** | | **Religion** | **:** | |
| **Taluk** | **:** | | **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 07.12.2023.**

**மனுதாரர் தரப்பு 5 வது சாட்சியின் வாக்குமூலம்:**

1. நான் தற்சமயம் இரணியல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி காவல் நிலையத்தில் மேற்படி மனு எண் தொடர்பாக நான் விசாரணை செய்து விசாரணை அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். 10.04.2023 ம் தேதி நான் அறிக்கையை தயார் செய்துவிட்டேன். நான் மேற்படி மனுதாரர், சந்திரசேகர், சித்திரா, புதுமை இலட்சுமி ஆகியோர்களுக்கு எதிராக கொடுத்த புகாரில் நான் மேற்படி 3 நபர்களையும் நான் விசாரித்தேனா என்றால் நான் சந்திரசேகர் மற்றும் மனுதாரர் வேலப்பன் பிள்ளையை மட்டுமே விசாரித்தேன். பலமுறை அறிவிப்பு கொடுத்தும் புதுமை இலட்சுமி, சித்திரா ஆகிய இருவரும் வரவில்லை.

2. நான் சித்திராவை விசாரிக்கவில்லை என்று சொல்லியபிறகு எவ்வாறு சித்திராவை விசாரித்ததாக அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் போனில் அனைத்து எதிர் மனுதாரர்களையும் விசாரித்தேன் நேரில் வரவில்லை. அனைத்து எதிர் மனுதாரர்களுக்கும் நான் அழைப்பாணை கொடுத்தேனா என்றால் தபால் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அதை நான் எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை. அழைப்பாணை அனுப்பிய விவரத்தையும் குறிப்பிடவில்லை.

3. மேற்படி அறிக்கையில் இருதரப்பையும் விசாரித்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் வாக்குமூலம் வைத்துள்ளேன். இருதரப்புக்கும் போதிய வாய்ப்பு கொடுத்து நான் விசாரித்ததாக நான் அறிக்கையில் குறிப்பிடவில்லை. நான் எதன் அடிப்படையில் மேற்படி மனுவை கிரயம் என்றும் முடிவு செய்தேன் என்றால் பத்திரத்தின் அடிப்படையில் தான். மேற்படி ஆவணத்தை சார் பதிவாளருக்கு அனுப்பி அதன் உண்மை தன்மையை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை நான் நேரடியாக சென்று விசாரித்து தெரிந்து கொண்டேன்.

4. நான் புகார் வந்த தினமே சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றுவிட்டேன். நான் அதனை பொது நாட் குறிப்பேட்டில் பதிவுசெய்தேனா என்றால் அதுகுறித்து நான் பதிவு செய்யவில்லை. நான் உரிமையியல் பிரச்சனை சம்பந்தமாக வரும்போது சார்பதிவாளர் அலுவலம் அருகில் இருப்பதால் உடன் சென்று விசாரித்துவிடுவேன்.

5. நான் மேற்படி ஆவணத்தில் சாட்சியாக உள்ள நபர்களை நான் அழைப்பு அனுப்பி விசாரித்தேனா என்றால் ஆம் விசாரித்தேன்.

6. ஆவண எழுத்தரை நான் போனில் விசாரித்தேன். அவர் பெயர் வழக்கறிஞர் ஜெயபிரசாத்,அவரிடம் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. நான் இடத்தை பார்வையிட்டேனா என்றால் ஆம் பார்வையிட்டேன். மேற்படி இடத்தின் தோராய மதிப்பு எதுவும் தெரியுமா என்றால் சென்ட் 6 முதல் 8 இலட்சம் வரை போகும். 17 இலட்ச ரூபாய்க்கு கிரயம் பெற்றதாக நான் நினைக்கிறேன். ஆவணத்தில் 3,25,800 என்று உள்ளது . மேற்படி இடம் நிலையத்திலிருந்து 1 1/2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. தக்கலை மெயின் ரோட்டில் உள்ளது. நான் சம்பவ இடத்தை பார்வையிட்டபோது தகர சீட்டால் அடைக்கப்பட்டிருந்தது.

7. அந்த தகர சீட்டை போட்டு அனுபவத்திலிருந்தது எதிர் மனுதாரர்கள் தான் என்று மனுதாரர் என்னிடம் தெரிவித்தார். நான் 2023 ம் ஆண்டு தான் தல விசாரணை செய்தேன். பணபரிவர்த்தனை சம்பந்தமாக வங்கி அதிகாரிகளை விசாரணை செய்யவில்லை. நான் இந்த வழக்கில் எ 1 டமிருந்து எ 2 விற்கு பரிவர்த்தனையில் ஈடுபட்டவரை விசாரித்தேனா என்றால் இல்லை. மனுதாரரிடமிருந்து எ 1 யார் மூலமாக கிரயம் பெற்றார் என்பதை நான் விசாரித்தேனா என்றால் ஆம் போண் மூலம் விசாரித்தேன். அவர் பெயர் சரோஜா மற்றொருவர் பெயர் திரவியராஜ். மனுதாரர் முன்னிலையில் விசாரித்தேன் வாக்குமூலம் கொடுக்கவில்லை.

8. நான் கந்துவட்டி சம்பந்தமான வழக்குகளை இந்த வழக்கை கையாண்டேனா என்றால் வட்டி குறித்த விவரங்களை ஆவணங்களுடன் மனுதாரர் விசாரிக்கவில்லை என்பதால் விசாரிக்கவில்லை. மனுதாரர் கூறிய அனைத்து சாட்சிகளையும் நிலையத்தில் வைத்தும் போணிலும் விசாரித்தேன். நான் யார்யாரை விசாரித்தேன் என்ன வாக்குமூலம் பதிவுசெய்தேன் என்பதை ஒரு அறிக்கை மூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முடியுமா என்றால் முடியும்.

9. நான் சமர்ப்பித்த அறிக்கையில் 2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் அம்மன் பேக்கரி என்ற பெயரில் கடை நடத்திவருவதாக 2 வது எதிர்மனுதாரர் தான் சொன்னார். எனது வாக்குமூலத்தில் அவர் வாடகைக்கு விட்டதாக சொல்லியுள்ளார். நான் எனது அறிக்கையில் மனுதாரர் பக்கம் தவறு உள்ளதாக எதன் அடிப்படையில் கருதினேன் என்றால் சொத்தின் மதிப்பு பலமடங்கு உயர்ந்ததால் கருதினேன். எதன் அடிப்படையில்

என்றால் மார்க்கெட் மதிப்பை வைத்து தான் அவர் அவ்வாறு எண்ணினார் என்று கருதினே. அப்படியானால் அவர் கிரயம் வாங்கிய காலகட்டத்தில் அதன் மதிப்பு என்னவென்றால் ஆவணத்தில் உள்ளதை வைத்து தான் முடிவு செய்தேன்.

10. 3 ஆண்டுகளுக்கு பிறகு வாங்கி விலைக்கே மேற்படி பத்திரம் மீண்டும் விற்பனை செய்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

11. 1வது எதிர்மனுதாரர் வட்டிக்காக மனுதாரருக்கு பணத்தை கொடுத்து அதற்கு ஆதரவாக பத்திரபதிவு நடைமுறையின்போது அடமானம் என்று கூறி ஏமாற்றி கிரய பத்திரமாக பதிவு செய்து அதனை மனுதாரருக்கு தெரியபடுத்தாமலே வட்டியையும் உயர்த்தி கந்துவட்டியாக வசூலித்து அதனால் மேற்படி மனுதாரர் பாதிப்படைந்து மேற்படி கந்து வட்டியையும் கொடுத்து தனது சொத்தினை அடமானத்தை மீட்க வேண்டி பணத்தினை தயார் செய்து கொடுத்போது மேற்படி இடம் மோசடியாக 2வது எதிர்மனுதாரருக்கு பரிவர்த்தனை செய்யப்பட்டது என்றாலும் அது தெரியாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் நான் ஒரு தலை பட்சமாக எனது விசாரணையை செய்து உண்மைக்கு மாறான ஒரு அறிக்கையை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டேனா என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,,
இரணியல்

IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**CRLMP.No. 41/2023 P.W. 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. கமல் ஜார்ஜ், உதவியாளர் | **Caste** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 07.12.2023.**

**மனுதாரர் தரப்பு 5 வது சாட்சியின் வாக்குமூலம்**:

1. நான் தற்சமயம் இராஜாக்கமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பொறுப்பு சார்பதிவாளராக இருந்துவருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கேட்கப்பட்ட ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன் அதில் 13 பக்கங்கள் உள்ளது. மேற்படி பத்திரம் பதிவு செய்த காலகட்டங்களில் இணையதளம் வாயிலாக பதியபட்டது நடைமுறைபடுத்தப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் தனியாக TP நம்பர் பண பரிவர்த்தனைக்காக கொடுப்பதில்லை. மேற்படி ஆவணம் ஜெய பிரசாத் என்பவரால் தயார் செய்யப்பட்டது. அவருக்கு TNReginet Id உள்ளதா என்றால் அது எனக்கு தெரியாது.

2. யார் ஐடியிலிருந்து மேற்படி ஆவணம் பதிவேற்றம் செய்யப்பட்டது என்று எங்களுக்கு தெரியாது. நடைமுறையின் படி தரப்பினர்களின் அடையாள ஆவணத்தை சரிபார்த்தபிறகே பதிவிற்கு அனுமதிப்போம். மேற்படி தரப்பினர்கள் அனைவரின் அடையாள அட்டையை பரிசோதித்தேன். மேற்படி நபர்களின் அடையாள ஆவணத்தை பதிவேற்றம் செய்வது வழக்கம். மேற்படி ஆவணத்தில் திரவியராஜ் என்ற சாட்சியின் அடையாள அட்டையை நான் பரிசோதித்தேனா என்றால் ஆம் பரிசோதித்தேன். அவர் அடையாள அட்டை ஏன் பதிவில் காணப்படவில்லை என்றால் 13 வது பக்கத்தை 2 தடவை ஸ்கேன் செய்துவிட்டார்கள். அது நிர்வாக தவறில் நடந்துவிட்டது- அது பதிவு விதிமுறையை மீறியதும் ஆகும்.

3. திரவிய ராஜ் திருநெல்வேலி மாவட்டத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். ஆனால் கன்னியாகுமரியை சேர்ந்தவர் என்று 12 ம் பக்கத்தில் போடப்பட்டுள்ளது. என் முன்னால் எந்த பண வரிவர்த்தனையும் நடைபெறவில்லை. 4 வது பக்கத்தில் உள்ள பரிவர்த்தனை மூலமாக பணம் பெற்றுகொண்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதை வைத்து தான்

கூறினேன். மேற்படி பண பரிவர்த்தனை சம்பந்தமான ஆணவத்தை இணைக்க வேண்டும் என்று ஒரு சுற்றறிக்கை உள்ளது என்றால் அவ்வாறு இல்லை. சரோஜாவின் அடையாள அட்டைக்கு கீழே கிரயம் பெறுபவர் கிரயம் வாங்குபவர் என்ற வாசகம் இடம்பெறவில்லை மற்ற அனைவர் அடையாள அட்டையின் கீழும் அவ்வாறு இடம்பெற்றிருந்தது என்றால் சரிதான்.

4. ஆவண எழுத்தர் ஆவணத்தை தாக்கல் செய்யும்போது நேரில் வந்தாரா என்று நியாபகம் இல்லை. தரப்பினரிடம் பணம் பெற்று கொண்டதற்கான கேள்வியை நான் கேட்பேனா என்றால் ஆம் கேட்பேன். இந்த பத்திரத்திலும் அவ்வாறு கேட்டேனா என்றால் நியாபகம் இல்லை. சந்தை மதிப்பிற்கும் அரசு மதிப்பீட்டிற்கும் மேற்படி சொத்திற்கும் எவ்வளவு வித்தியாசம் இருந்தது என்றால் தெரியாது.

5. என்னிடம் முறையற்ற முறையில் சமர்ப்பித்த ஆவணத்தை சரிவர விசாரணை செய்யாமல் விதிகளுக்கு மாறாக மனுதாரருக்கு பாதிப்பு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக உண்மைக்கு மாறான தகவல்களுடன் நான் என் அதிகாரத்தை பயன்படுத்தி யாருக்காகவோ தவறு என்று தெரிந்தும் துணைபோயுள்ளேன் என்றால் இல்லை.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,,
இரணியல்

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL</u>**

**DEPOSITION OF WITNESS**

<u>(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )</u>

**<u>CRLMP.No. 41/2023 P.W. 7</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ரஞ்சித் குமார் | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 07.12.2023.**

**மனுதாரர் தரப்பு 5 வது சாட்சியின் வாக்குமூலம்:**

1. நான் தற்சமயம் உதவி மேலாளராக TMB வங்கியில் தலக்குளம் கிளையில் பணிபுரிந்து வருகிறேன். நான் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததால் வந்தேன். UTR No. TMBLH19326099432. இது எது சம்பந்தமானது என்றால் New KS Chelladurai Stores என்ற பெயரில் இருந்து வேலப்பன் பிள்ளை என்பவருக்கு 3,25,800 ரூபாய்க்கு பணபரிவர்த்தனை செய்ததற்கானது. மேற்படி சந்திரசேகர் என்பவர் மேற்படி செல்லதுரை ஸ்டோர்ஸின் உரிமையாளர். 22.11.2019 ம் தேதி பரிவர்த்தனை நடந்துள்ளது. TMBLR52019112200099432 என்ற UTR பரிவர்த்தனை எண் வேலப்பன் பிள்ளையின் கனரா வங்கி கிளையில் கொடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி TMBLR5 என்பது TMB வங்கி கிளை நாகர்கோவில் கிளையுடையது என்று சொன்னால் என்னால் பரிசோதித்து தான் சொல்லமுடியும். மேற்படி சாட்சி வங்கி ஆவணங்களை பரிசோதித்துவிட்டு சொல்கிறேன் என்று சொன்னதால் சாட்சி விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,,

இரணியல்

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**CRLMP.No. 41/2023 P.W. 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. சரோஜா | **Caste** | : | |
| **Father's Name** | : | க/பெ. தாவீது | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 07.12.2023.**

**மனுதாரர் தரப்பு 5 வது சாட்சியின் வாக்குமூலம்**:

1. நான் குலசேகரம் சந்திரசேகர் என்பவர் கடையில் சிறிது காலம் வேலை பார்த்தேன். மேற்படி வழக்காவணத்தில் நான் தான் கையொப்பம் போட்டேன். சந்திரசேகர் வட்டிக்கு கொடுப்பாரா என்று எனக்கு தெரியாது. சந்திரசேகரிடம் மனுதாரர் கடன் வாங்கிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் கடன் வாங்கி கிரய பத்திரம் அதில் என்னை சாட்சி கையொப்பம் போடசொன்னாங்க. மேற்படி பத்திரத்தில் 3 இடத்தில் கையொப்பம் போட்டேன். ஆதார் கார்டு, போட்டோ, ஆளறிதல், ஆவண சாட்சி ஆகிய இடங்களில் போட்டோன். நான் மேற்படி ஆவணத்தை படித்து பார்க்கவில்லை. கிரய பத்திரம் என்று இருந்தது அதில் நான் கையெழுத்து போட்டேன். சந்திரசேகர் மனுதாரருக்கு எவ்வளவு ரூபாய் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. பதிவலுவலகத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன். எனக்கு பணம் எதுவும் தரவில்லை.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,,

இரணியல்